செய்திப் பணிப்பாளர்/ செய்திப் பதிப்பாசிரியர் 21.11.2016

# செய்தி வெளியீடு

## தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (அடிப்படை 2013=100) ; ஒக்ரோபர் 2016

## தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்

## தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அறிக்கை வெளியிடுகையில், தொகைமதிப்பு, புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி. அமர. சத்தரசிங்ஹ அவர்கள், 2016 ஒக்ரோபர் இற்கான தே.நு.வி.சு. அடிப்படையான வருடத்தின் மீது வருடம் பணவீக்கம் 5.0% என கணிக்கப்பட்டதுடன் 2016 செப்ரெம்பர் இல் பணவீக்கம் 4.7% ஆகக் காணப்பட்டதெனவும் தெரிவித்தார். ஒக்ரோபர் 2015 உடன் ஒப்பிடுகையில் 2016 ஒக்ரோபர் இல், உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளின் செலவினப்பெறுமதி முறையே 2.3%, 2.8% ஆக அதிகரித்துள்ளது.

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம், 2016 ஒக்ரோபர் இற்கான தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணை வெளியிட்டுள்ளது. 2016 ஒக்ரோபர் இற்கான தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் 114.7 என கணிப்பிடப்பட்டுள்ளது. இது கடந்த மாத (செப்ரெம்பர்) சுட்டெண்ணான 113.5 உடன் ஒப்பிடுகையில் 1.2 சுட்டெண் புள்ளி அல்லது 1.1 சதவீத அதிகரிப்பைக் காட்டுகிறது. இது உணவுப் பொருட்களின் செலவுப் பெறுமதி 0.79% அதிகரிப்பினாலும் மற்றும் உணவல்லாப் பொருட்களின் செலவுப் பெறுமதி 0.22% அதிகரிப்பினாலும் ஏற்பட்டதாகும்.

செப்ரெம்பர் 2016 உடன் ஒப்பிடுகையில் 2016 ஒக்ரோபர் இற்கான உணவுப் பொருட்களின் செலவுப் பெறுமதி, 0.79% அதிகரிப்பைக் காட்டுகிறது. கடந்த மாதம் (செப்ரெம்பர்) உடன் ஒப்பிடும்போது அரிசி, தேங்காய், தேசிக்காய், மரக்கறி, கருவாடு, தேங்காய் எண்ணெய், அன்னாசி, வாழைப்பழம், சீனி, மைசூர் பருப்பு, சின்ன வெங்காயம், உள்ளி, கோதுமை மா, கோழி இறைச்சி என்பவற்றின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பே 2016 ஒக்ரோபரில் உணவுப் பொருட்களின் பெறுமதி அதிகரிப்புக்குக் காரணமாகும். எனினும் பப்பாசி, மாம்பழம், உடன் மீன், முட்டை,, பச்சை மிளகாய், உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம் என்பவற்றின் விலைகளில் கடந்த மாதம் (செப்ரெம்பர்) உடன் ஒப்பிடும்போது விலை வீழ்ச்சி காணப்படுகிறது.

செப்ரெம்பர் 2016 உடன் ஒப்பிடுகையில் 2016 ஒக்ரோபர் இற்கான உணவல்லாப் பொருட்களின் செலவுப் பெறுமதி, 0.22% அதிகரிப்பினைக் காட்டுகிறது. இது பிரதானமாக உணவல்லாப் பொருட்களின் பிரிவில் 'மது பானங்கள், புகையிலை மற்றும் போதைவஸ்து', 'நானாவிதப் பொருட்களும் சேவைகளும்', 'கேளிக்கை மற்றும் கலாச்சாரம்' என்பவற்றில் ஏற்பட்ட செலவுப் பெறுமதி அதிகரிப்பினாலாகும். 'உடையும் காலணியும்', 'தளபாடம், குடித்தன உபகரணம் மற்றும் வழமையான குடித்தனப் பராமரிப்பு', 'உணவு விடுதியும் ஹோட்டல்களும்' பிரிவின் செலவுப் பெறுமதியில் கடந்த மாதத்துடன் ஒப்பிடுகையில் மிகச் சிறிதளவு அதிகரிப்பு காணப்பட்டது 'வீடு, நீர், மின், எரிவாயு, ஏனைய எரிபொருள்', 'சுகாதாரம்', 'போக்குவரத்து', 'தொடர்பாடல்', 'கல்வி' ஆகிய பிரிவுகளின் செலவுப் பெறுமதியில் இம்மாதம் மாற்றம் எதுவும் காணப்படவில்லை. 'மது பானங்கள், புகையிலை மற்றும் போதைவஸ்து' இலுள்ள செலவுப் பெறுமதி அதிகரிப்பு, இம்மாதத் தொடக்கத்தில் புகையிலை உற்பத்திகளின் விலை அதிகரிப்பினால் ஏற்பட்டதாகும்.




## தே.நு.வி.சு. இன் அசைவுகள் (அடிப்படை : 2013 = 100)

| வருடம் | மாதம் | சுட்டெண் | சுட்டெண்ணிற்கான மாதத்திற்கு மாதம் % மாற்றம் | வருடத்தின்மீது வருடம் பணவீக்க% |
|---|---|---|---|---|
| **2015** | ஒக்ரோபர் | 109.2 | 0.7 | 3.0 |
| | நவம்பர் | 112.0 | 2.6 | 4.8 |
| | டிசம்பர் | 113.2 | 1.1 | 4.2 |
| **2016** | ஜனவரி | 112.0 | -1.1 | -0.7 |
| | பெப்ரவரி | 110.8 | -1.1 | 1.7 |
| | மார்ச் | 110.0 | -0.7 | 2.2 |
| | ஏப்ரல் | 111.6 | 1.5 | 4.3 |
| | மே | 113.7 | 1.9 | 5.3 |
| | யூன் | 116.1 | 2.1 | 6.4 |
| | யூலை | 115.2 | -0.8 | 5.8 |
| | ஓகஸ்ட் | 113.3 | -1.6 | 4.5 |
| | செப்ரெம்பர் | 113.5 | 0.2 | 4.7 |
| | **ஒக்ரோபர்** | 114.7 | 1.1 | 5.0 |

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்
தொ. இல.: 011-2147001 / 011-2147020